மோடியின் தோல்வி பயத்தால் தொடரும் அநாகரீக தேர்தல் பிரச்சாரம்

செல்வப்பெருந்தகை காட்டம்

சென்னை, மே 28–

தேர்தல் தோல்வி பயத்தால், தேர்தல் பரப்புரையில் அநாகரீகமாக பேசி வந்த நரேந்திர மோடி, எதிர்க்கட்சியினர் ஆபாச நடனம் ஆடி மகிழ்ந்து கொள்ளலாம் என்று தரம் தாழ்ந்து பேசி இருப்பது கண்டனத்துக்குரியது என்று செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இது குறித்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

மக்களவை தேர்தல் பரப்புரையின் தொடக்கத்திலேயே காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை திரித்துக்கூறி, முஸ்லிம் லீக்கின் தேர்தல் அறிக்கையைப் போல இருப்பதாக கூறி, அபத்தமான வாதங்களை நாள்தோறும் பிரதமர் மோடி பேசி வந்தார். மேலும் காங்கிரசின் மறுப்பையும் பொருட்படுத்தாமல், மத அடிப்படையில் மக்களை பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேட முற்படுகிற பரப்புரையை பாசிச போக்கு கொண்ட நரேந்திர மோடி நிறுத்திக் கொள்ளவில்லை.

முதல்கட்ட தேர்தலில் தமிழ்நாட்டில் தொடங்கிய மோடி எதிர்ப்பு அலை, 6 கட்டங்களாக இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் எதிரொலிக்க தொடங்கியதால் தேர்தல் கள நிலவரத்தை உளவுத்துறை மூலம் அறிந்த பிரதமர் மோடியின் பேச்சில் பதற்றமும், அச்சமும் தொடர்ந்து வெளிப்பட ஆரம்பித்தன. காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் இராமர் கோயிலை புல்டோசர் வைத்து இடித்து விடுவார்கள் என்று கூறுவதைவிட முட்டாள்தனமான பேச்சு வேறு எதுவும் இருக்க முடியாது.

அதோடு நிற்காமல் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க அரசியல் சட்டத்தையே மாற்றி விடுவார்கள் என்றும், தற்போது எஸ்.சி., எஸ்.டி., ஒ.பி.சி. மக்களுக்கு வழங்கப்படுகிற இடஒதுக்கீட்டை பறித்து இஸ்லாமியர்களுக்கு வழங்கி விடுவார்கள் என்று கடைந்தெடுத்த ஆதாரமற்ற அவதூறு பிரச்சாரத்தை சமீபகாலமாக தொடர்ந்து பிரதமர் மோடி நவீன கோயபல்ஸ் போல பேசினார். இடஒதுக்கீடு என்பது மதத்தின் அடிப்படையில் வழங்கப்படுவதில்லை என்று பல நீதிமன்ற தீர்ப்புகள் உறுதி செய்திருக்கின்றன. இடஒதுக்கீடு என்பது மதங்களை பொருட்படுத்தாமல் சமூக, கல்வி ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ள அனைவருக்கும் வழங்கப்படுகிறது. இந்து மதத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இடஒதுக்கீட்டில் எப்படி பங்கு இருக்கிறதோ, அதேபோல் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் சீக்கிய மதத்தை சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பங்கு இருக்கிறது.

மோடிக்கு எதிர்ப்பு அலை

உண்மை நிலை இப்படியிருக்க சிறுபான்மையின மக்களுக்கு எதிராக வெறுப்பு பேச்சை பரப்புரையில் திரும்பத் திரும்ப கூறுவதன் மூலமாக தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்று மோடி பகல் கனவு காண்கிறார். ஆனால், 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாத காரணத்தால் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், தவறான ஜி.எஸ்.டி. அமலாக்கம், விவசாயிகளின் விளைப் பொருட்களுக்கு நியாய விலை மறுப்பு, மாநில உரிமைகள் பறிப்பு என மக்கள் விரோத ஆட்சி நடத்தியதால் மக்களிடையே பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராக அலை வீசிக் கொண்டிருக்கிறது.

மோடி தனது பரப்புரையில் எதிர்கட்சியினரை மிகமிக இழிவாக தரக்குறைவான முறையில் பிரதமர் பதவியை வகிக்கிறோம் என்கிற குறைந்தபட்ச நாகரீகம் கூட இல்லாமல் பேசி வருகிறார். முகலாய அரசவையில் நடத்தப்படுகிற முஜ்ரா நடனத்தை எதிர்கட்சியினர் நடத்தி மகிழ்ந்து கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார். ஒரு பிரதமர் ஆபாச நடனத்தை மேற்கோள் காட்டி எதிர்கட்சியினரை தேவையில்லாமல் இழிவுபடுத்துவது நரேந்திர மோடியின் அரசியல் அநாகரீகத்தையே காட்டுகிறது.

தேர்தல் பரப்புரையில் மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் நரேந்திர மோடி தன்னை கடவுளின் அவதாரம் என்றும், 'தாய் தன்னை பெற்றெடுக்கவில்லை என்று கூறும் ஒருவர், உயிரியல் வழிமுறைப்படி தான் பிறக்கவில்லை என்று கூறும் ஒருவர், இந்திய நாட்டின் பிரதமராக இருப்பதற்கு மனரீதியாக தகுதியுடைவர் தானா?" என்கிற கேள்வி நாட்டு மக்களிடையே எழுந்திருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளாக, மக்களை மதரீதியாக ஏமாற்றியதைப் போல 2024 இல் ஏமாற்ற முடியாது. மக்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள். மக்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைத்த மோடியின் ஆட்சியை அகற்றி பாடம் புகட்டுவதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்தியா கூட்டணி ஜூன் 4 ஆம் தேதிக்கு பிறகு ஆட்சி அமைக்கப் போவது உறுதி. இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

தனியார் தொலைக்காட்சி பெண் ஊழியர் பாலியல் புகார்: கோவில் பூசாரி கைது

சென்னை, மே 28–

தனியார் தொலைக்காட்சி பெண் ஊழியர் கொடுத்த பாலியல் புகார் தொடர்பாக கோவில் பூசாரி கைது செய்யப்பட்டார்.

சென்னை சாலிகிராமத்தை சேர்ந்த தனியார் தொலைக்காட்சி பெண் ஊழியர் ஒருவர் பாரிமுனையில் உள்ள கோவில் பூசாரி கார்த்திக் முனுசாமி மீது பாலியல் புகார் அளித்திருந்தார். பூசாரி கார்த்திக் முனுசாமி, கோவில் தீர்த்தம் என்று கூறி ஒரு திரவத்தை குடிக்க கொடுத்தார். அதனை குடித்த பிறகு நான் மயங்கி விட்டேன். அப்போது பூசாரி கார்த்திக் முனுசாமி என்னை கற்பழித்துவிட்டார். என்னை கட்டாய கருக்கலைப்பு செய்ய வைத்தார். என்னுடன் குடும்பம் நடத்தி வந்த நிலையிலும் முக்கிய பிரமுகர் ஒருவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று அவருடன் நெருக்கமாக இருக்க சொன்னார் என்று புகார் அளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக விருகம்பாக்கம் மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இதையடுத்து தலைமறைவான பூசாரியை கோவில் நிர்வாகம் சஸ்பெண்டு செய்திருந்தது. அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லாமல் இருக்க லுக் அவுட் நோட்டீசும் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மேட்டுப்பாளையத்தில் பதுங்கி இருந்த பூசாரி கார்த்திக் முனுசாமி கைது செய்யப்பட்டார்.

ஜூன் 1–ந் தேதி தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்

சென்னை, மே 28–

ஜூன் 1–ம் தேதி திமுக மாவட்டச் செயலாளர்கள், மக்களவை வேட்பாளர்கள், தலைமை முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெறும் என அக்கட்சி பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார். இதுகுறித்து தி.மு.க. மூத்த நிர்வாகிகளுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

ஜூன் 1ம் தேதி டெல்லியில் இண்டியா கூட்டணியின் ஆலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் முதல்வர் ஸ்டாலின் கலந்துகொள்ள உள்ளார். அதேபோல் ஜூன் 3ம் தேதி முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறவுள்ளது. இதற்கடுத்த நாள் மக்களவை தேர்தல் முடிவுகள் வெளியாகவுள்ளன.

இந்த மூன்று விஷயங்கள் தொடர்பாகவும் திமுக மூத்த நிர்வாகிகளுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். கருணாநிதி நூற்றாண்டு நிறைவு விழாவுக்கு செய்ய வேண்டிய ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை வழங்கிய முதல்வர் ஸ்டாலின், வாக்கு எண்ணிக்கையின்போது திமுக முகவர்கள் செயல்பட வேண்டிய விதம் தொடர்பாகவும் தனது ஆலோசனைகளை வழங்கியுள்ளார். தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

ஜூன்–4 அன்று நடைபெற உள்ள வாக்கு எண்ணிக்கை குறித்து கலந்து ஆலோசித்திட, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக வேட்பாளர்கள், தலைமை முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகிற 1–ந்தேதி (சனிக்கிழமை) காலை 11 மணி அளவில், காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என். ஆர்.இளங்கோ, எம்.பி., வாக்கு எண்ணிக்கையின்போது தலைமை முகவர் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழி முறைகள் குறித்து ஆலோசனை வழங்குவார். கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள், கழக வேட்பாளர்கள் தலைமை முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

INDOWIND ENERGY LIMITED

CIN: L40108TN1995PLC032311
REGD Office: "Kothari Buildings" 4th Floor, 114, M.G.Road, Nungambakkam, Chennai- 600 034. Tel: 044-28331310 Email: contact@indowind.com

EXTRACT OF STATEMENT OF AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND YEAR ENDED 31.03.2024

(Rs. In Lakhs)

Particular	Consolidated				
	Quarter ended			Year ended	
	31.03.2024 (Audited)	31.12.2023 (Un-Audited)	31.03.2023 (Audited)	31.03.2024 (Audited)	31.03.2023 (Audited)
Total income from operations (Gross)	617.82	1003.64	475.07	4184.18	3485.86
Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and Extraordinary Items)	3.30	7.09	2.70	661.02	570.15
Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and Extraordinary Items)	3.30	7.09	-683.73	556.02	-116.28
Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary Items)	63.12	-6.98	-2493.39	726.89	-1925.94
Total Comprehensive Income for the period (Comprising Profit/Loss for the period (after tax) and other comprehensive Income (after tax))	65.50	8.14	-2693.16	711.67	-2130.95
Paid up Equity Share Capital of Rs. 10/- each	10733.48	10733.48	10733.48	10733.48	10733.48
Reserves (excluding Revaluation Reserve)	12982.95		12280.02	12982.95	12280.02
Earnings Per Share (of `Rs.10/- each) (for continuing and discontinued operations)					
Basic (in Rs.):	0.06	0.01	-2.77	0.68	-2.14
Diluted (in Rs.):	0.06	0.01	-2.77	0.68	-2.14

Note: 1. Additional information on Standalone Financial Results pursuant to Reg. 47(1)(b) (Rs. In Lakhs)

Particulars	Standalone				
	Quarter ended			Year ended	
	31.03.2024 (Audited)	31.12.2023 Un-Audited)	31.03.2023 (Audited)	31.03.2024 (Audited)	31.03.2023 (Audited)
Total income from Operations	408.84	714.93	393.60	3017.12	2905.59
Profit/ (Loss) Before Tax	1.67	-104.12	-673.96	367.47	-117.24
Profit/ (Loss) After Tax	61.50	-118.19	-1926.64	538.35	-1926.64
Total Comprehensive Income	69.79	-110.08	-2869.20	554.05	-2312.46

2. The above is an extract of the detailed format of the audited financial results for the quarter and financial year ended on 31st March 2024 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Standalone and Consolidated Financial Results were reviewed by the Audit Committee and approved at the Meeting of the Board of directors of the Company at the Meeting held on 27th May, 2024 and the same are available on the Stock Exchange websites. (www.bseindia.com / www.nseindia.com) and Company's Website www.indowind.com

For **INDOWIND ENERGY LIMITED**
Sd./- Niranjan R Jagtap
Director

Place : Chennai
Date : 27th May, 2024

பெயர் மாற்றம்

Sur Name: Tiruvidai Marudhur VenkataSubramanyam, Given name: Vignesh, தந்தை பெயர்: வெங்கட சுப்ரமண்யம், பிறந்த தேதி: 14.01.1991, பிளாட் நெ.B13–69/73A, 2வது குறுக்கு தெரு, ஸ்டேட் பேங்க் காலனி விரிவு, நங்கநல்லூர், சென்னை–600 061 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி Sur Name: Thiruvidai Maruthur VenkataSubramanyam, Given name: Vignesh என்று அழைக்கப்படுகிறேன்.

Sur Name: Tiruvidai Marudhur VenkataSubramanyam

BEFORE THE HON'BLE SUB COURT AT ALANDUR
EA.1/24
IN
E.P NO. 472 of 2022

M/S.Manapuram Finance Limited Registered office at CIN-L65910KL, 1192PL006623 IV/470A (Old), W638A(New) Manappuram House, Valapad, Thrissur-680567, Kerala through its duly constituted Attorney/ Authorised Signatory Mr.Girish.R

....DECREE HOLDER
-VS-

Mr. Esmail. E, S/O Ibrahim, Old no-11, New no-11, Avair Street, Pazhavanthangal, Tamil Nadu 600114.

...JUDGEMENT DEBTORS

In the above matter the Hon'ble SUB COURT AT ALANDUR has passed order of Paper Publication for JD ON 02.03.2024 and for your's presence on 04.06.2024. Hence Be present on the above said date either personally or through your counsel, failing which the matter will be decided in your absence.

A.DAMODARAN LAW FIRM
Advocate
Counsel for Petitioner/ Decree Holder

பொது அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், எனது கட்சிகாரர் திரு.ரா.தில்லைக்கரசன் (த/பெ/திரு.ராமையா, ஆதார் எண் 9737 6508 6523) 31/69, பி.ஏ.அபார்ட், பிளாட்-20, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையார், சென்னை-20. அவருக்கு பாத்தியப்பட்ட அசல் நிலப்பத்திரம் சர்வே எண்கள். 65/3C, 67/1D, 67/1E (3.09 ஏக்கர்) மீனன்தொட்டி கிராமம் சூலகிரியில் பதிவுசெய்யப்பட்ட ஆவண எண்.498/2012. தேதி 07/02/2012. எனது கட்சிகாரர் மேற்கூறப்பட்ட அசல் நிலப்பத்திரம் மற்றும் ஆவணங்களை தனது உடன்பிறந்த சகோதரி மற்றும் அவரது கணவர் திரு. P.K.குமாரதேவன் அவர்கள் வசிக்கும் 18/4, 9வது லேன், சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை 600020 வீட்டில் வைத்திருந்தார். இந்நிலையில் கடந்த 04.12.2023 தேதி சென்னையில் மிக்ஜாம் புயல் தாக்கியதால் எனது கட்சிகாரரின் மாமா வீட்டின் கீழ் தளத்தில் மழைநீர் புகுந்துவிட்டது என்று தகவல் கேட்டும் மறுநாள் 05.12.2023ந் தேதி காலை 9.00 மணியளவில், எனது கட்சிகாரர் இருசக்கர வாகனம் மூலம் தனது மாமா வீட்டிற்கு வந்து, இருசக்கர வாகனத்தை மாமா வீட்டின் எதிர்புறத்தில் நிறுத்தினர். வீட்டிற்குள் நுழைந்து பார்த்த போது, மாமா வீட்டின் அடித்தளம் முழுவதும் மழை நீர் புகுந்து, அதனால் வீட்டின் அலமாரியில் வைத்திருந்த ஆவணங்கள் முழுவதும் நனைந்திருந்தது. உடனே எனது கட்சிகாரர், அவரது மாமா மற்றும் அக்கா ஆகியோருடன் அனைத்து ஆவணங்களையும் எடுத்து பாதுகாப்பான இடத்தில் வைத்தனர். மேலும், தனக்கு சொந்தமான கிருஷ்ணகிரி மாவட்டம் சூலகிரியில் 3ஏக்கர் மற்றும் 9 சென்ட் ஆவண எண்.498/2012/SRO சூலகிரி, சர்வே எண் 65/3C, 67/1D, 67/1E எண்ணுக்குறிய அசல் நிலப்பத்திரம் எடுத்து, அந்த நிலப்பத்திரத்தை ஒரு லெதர் பையில் வைத்து, பின்னர் அந்த லெதர் பையை தனது இருசக்கர வாகனத்தின் பக்கவாட்டு பெட்டியில் வைத்துவிட்டு, தனது மாமா மற்றும் அக்காவுடன் சேர்ந்து வீட்டில் புகுந்த தண்ணீரை வெளியேற்றும் வேலையில் ஈடுபட்டனர். சுமார் 12.00 மணியளவில், எனது கட்சிகாரர் வீட்டிற்கு கிளம்புவதற்காக தனது வாகனத்தை எடுக்க முற்படும் போது, தனது இருசக்கர வாகனத்தின் சைடு பெட்டியில் வைத்திருந்த மேற்கூறிய தனது லெதர் பையை காணவில்லை. சுற்றுப்புறம் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இதை சாஸ்திரி நகர் காவல் நிலையத்தில் எனது கட்சிக்காரர் 29.12.2023 அன்று புகார் செய்துள்ளார். CSR 730/2023. மேற்கூறப்பட்ட அசல் நிலப்பத்திரம் யாரேனும் கண்டெடுத்தால் சாஸ்திரி நகர் J5 காவல் நிலையத்திலோ அல்லது திரு. இரா.தில்லைக்கரசன் செல் எண் 9841012197 அல்லது எனது செல் எண். 9841026448 க்கு தொடர்பு கொள்ளவும்.

இந்த அசல் நிலபத்திரத்தை யாரேனும் கண்டெடுத்து அதை தவறாக பயன்படுத்த முற்பட்டால் கடுமையான லீகல் மற்றும் கிருமினல் குற்றத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

P.K. Kumaradevan
Advocate & Notary Public (Govt. of India)

SAPTARISHI™ Agro Industries Ltd

பதிவு அலுவலகம்: படாளம் சுகர் பாக்டரி ரோடு, பழையனூர் அஞ்சல், செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாடு –603 308.
www.saptarishiagro.com | saptarishi121@gmail.com. | Contact: 07940306965
CIN: L15499TN1992PLC022192

மார்ச் 31, 2024–ல் முடிந்த காலாண்டு/நிதி ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ஒரு பங்கு விபரத்தை தவிர ரூ.லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
		31.03.2024	31.12.2023	31.03.2023	31.03.2024
		தணிக்கை செய்தது	தணிக்கை செய்தது	தணிக்கை செய்தது	தணிக்கை செய்தது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	1595.84	1569.91	1288.03	4129.16
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	218.70	9.40	44.74	248.64
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	218.70	9.40	44.74	248.64
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	179.19	7.64	44.74	203.84
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டத்தை) உள்ளடக்கியது (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)	179.19	7.64	44.74	203.84
6	சம பங்கு மூலதனம்	3402.00	3402.00	3402.00	3402.00
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)				(2669.26)
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (வருடாந்திரம் அல்ல)	0.53	0.02	0.13	0.60
	அடிப்படை & பலமிழந்தது	0.53	0.02	0.13	0.60

குறிப்பு:

1. மேற்கண்ட முடிவுகள் கம்பெனியின் தணிக்கை குழுவினால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 27/05/2024 அன்று நடைபெற்ற கம்பெனி இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவுக் குறிப்பு செய்யப்பட்டது மற்றும் அது கம்பெனியின் சட்ட தணிக்கையாளர்களால் குறுகிய பரிசீலனை செய்யப்பட்டது.
2. செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் மேற்கண்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலாண்டு நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளத்தில் (www.saptarishiagro.com) உள்ளது.

சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– ருஷப் படேல்
நிர்வாக இயக்குனர் மற்றும் சிஎப்ஓ
DIN:02721107

இடம் : நியூயார்க், அமெரிக்கா
தேதி : 27.05.2024

அபான் ஆப்ஷோர் லிமிடெட்

பதிவு அலுவலகம்: ஜன்பிரியா கிரஸ்ட்' 113, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை–600 008 இந்தியா
CIN:L011191N1986PLC013473 Phone: (91)(44) 49060606 Fax: (91) (44) 28195527
e-mail : abanoffshore@aban.com website : abanoffshore.com

31 மார்ச் 2024–ல் முடிந்த காலாண்டு/ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கை

ரூ. மில்லியனில்

வ எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 31.03.2024 (தணிக்கை யானது)	முடிந்த ஆண்டு 31.03.2024 (தணிக்கை யானது)	முடிந்த காலாண்டு 31.03.2023 (தணிக்கை யானது)
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	1,474.57	4,477.43	933.84
2.	காலத்திற்கான நஷ்டம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	(3.304.13)	(12,955.71)	(3,704.84)
3.	வரிக்கு முன் காலத்திற்கான நஷ்டம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(3.304.13)	(12,955.71)	(3,704.84)
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர நஷ்டம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(3,401.43)	(13,178.41)	(3,805.92)
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கி உள்ளது)	(3,735.91)	(15,751.48)	(2,879.41)
6.	சம பங்குமூலதனம் (ஒவ்வொன்றும் முக மதிப்பு ரூ.2/– முழுவதும் செலுத்தப்பட்டது)	116.73	116.73	116.73
7.	ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கையான நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளபடி	-	2,09,150.18)	-
8.	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முக மதிப்பு ரூ.2/–) (வருடாந்திரமல்ல) (ரூபாயில்) (ஏ அடிப்படை	(58.28)	(225.81)	(64.85)
	பி) டைலூட்டட்	--	--	(0.36)

குறிப்புகள்:

(i) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு/ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு/ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.abanoffshore.comல் உள்ளது.

(ii) தனியான நிதிநிலை முடிவுகள் கீழ்க்கண்டவாறு உள்ளது

வ எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 31.03.2024 (தணிக்கை யானது)	முடிந்த ஆண்டு 31.03.2024 (தணிக்கை யானது)	முடிந்த காலாண்டு 31.03.2023 (தணிக்கை யானது)
1.	செயல்பாடுகள் மூலம் வருமானம்	294.08	901.99	148.48
2.	வரிக்கு முன் லாபம்	(763.72)	(2,792.16)	(1,031.45)
3.	வரிக்கு பின் நஷ்டம்	(764.14)	(2,830.18)	(1,101.78)

குழுவின் சார்பாக
CP கோபாலகிருஷ்ணன்
துணை நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிதி அதிகாரி

இடம்: சென்னை
தேதி : 27 மே, 2024

அழகேந்திரன் நிதி லிமிடெட்

CIN : U65991TN1992PLC023989

பதிவு அலுவலகம்: ஜம்பு டவர்ஸ், 2வது தளம், நெ.99, நியூ ஆவடி சாலை, கீழ்பாக்கம், சென்னை – 600 010
PH: 044-26471384/85 | Website: www.alagendrannidhi.net | Email: info@alagendrannidhi.net

நகைக் கடன் ஏல அறிவிப்பு

பல்வேறு கிளைகளில் எங்களிடம் நிதியின் உறுப்பினர்கள் ஈடு வைத்த தங்க நகைகளை பணம் கட்டி மீட்கத் தவறியதால் அவை வரும் 28.06.2024 வெள்ளிக்கிழமை அன்று மாலை 3.00 மணியளவில் மதுரை வடக்குவெளி வீதி, ஞானஒளிபுரம், கே.புதூர், வில்லாபுரம், திருமங்கலம், திருச்சி – தில்லைநகர் & வரகனேரி கிராமம், கோயமுத்தூர் காந்திபுரம், சென்னை கீழ்பாக்கம் & மேற்கு மாம்பலம், தேனி, ஈரோடு, சேலம், சிவகாசி, விளாத்திகுளம், திருநெல்வேலி, ராஜபாளையம், நாகர்கோவில், திருப்பூர், திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் கிளைகளில் ஏலம் விடப்படுவதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழே குறிப்பிட்ட காலங்களில் பெற்ற கடனை, செலுத்த வேண்டிய கெடு முடிவடைந்ததால் :

1. 29.02.2024 அன்று 12 மாத கெடுவில் கடனைத் திருப்புவதாகக் கூறி 28.02.2023 க்கு முன் கடன் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் நகைகளும்
2. 29.02.2024 அன்று 9 மாத கெடுவில் கடனைத் திருப்புவதாகக் கூறி 31.05.2023 க்கு முன் கடன் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் நகைகளும்
3. 29.02.2024 அன்று 6 மாத கெடுவில் கடனைத் திருப்புவதாகக் கூறி 31.08.2023 க்கு முன் கடன் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் நகைகளும்
4. 29.02.2024 அன்று 3 மாத கெடுவில் கடனைத் திருப்புவதாகக் கூறி 30.11.2023 க்கு முன் கடன் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் நகைகளும்

மற்றும் கடனை திருப்பித்தர வேண்டி தேதி எதுவாக இருப்பினும், மதிப்பீட்டுத் தொகையை விட அதிகமாக இருக்கும் கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்தாதவர்களின் தங்க நகைகளையும், ஏலத்தில் விடுவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய கடன்தாரர்கள் கடனை திருப்பிச் செலுத்தும்படி கூறி, முறைப்படி பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மற்றும் ஏல அறிவிப்பும் அனுப்பப்பட்டு வருகிறது. கடன்தாராகள் முழு பாக்கித் தொகைகளையும், கீழே குறிப்பிட்டுள்ள ஏலத் தேதிக்கு முன், மேற்படி கிளைகளில் பணம் செலுத்தி கடனை தீர்க்காவிட்டால் அவர்களால் ஈடு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் 28.06.2024 அன்று மதியம் 3.00 மணியளவில் நிதியின் அனைத்து கிளைகளிலும் கடன்தாரர்கள் பொறுப்பில் பகிரங்க ஏலம் விடப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கடன்தாரர்கள் பெயர், முகவரி, கணக்கு எண், ஈடு வைக்கப்பட்டுள்ள தங்க நகையின் விபரம், எடை முதலிய விவரங்கள் அந்தந்த கிளை அலுவலகத்தில் அறிவிப்பு பலகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:
நிதியின் சட்ட விதிகளின்படி தங்க நகைகள் ஏலம் விடப்படும். ஏலம் கேட்க விரும்புவோர் முன்பணமாக ரூ. 5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) செலுத்த வேண்டும். ஏலம் எடுத்தவர்கள் ஏலம் முடிந்தவுடன் முழுத்தொகையும் பணமாக செலுத்த வேண்டும். முன்னறிவிப்பின்றி ஏலத்தை ரத்து செய்யவோ தேதி மற்றும் இடத்தை மாற்றவோ நிதிக்கு முழு அதிகாரம் உண்டு.

தேதி: 28.05.2024
மேலாண் இயக்குனர்

கந்தகிரி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: மில் வளாகம், தபால் பெட்டி எண். 3, உடையபட்